# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

***வழக்கு எண்.SA.17018/F/2024***

திரு S.J. ஹசன் குத்தூஸ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / வக்ஃப் கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு, -- பொது அதிகார அமைப்பு
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை - 600 001.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 23.07.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 25.08.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 26.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு S.J. ஹசன் குத்தூஸ் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஜனாப் சையத் ஜாபிர், கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், ந.க.எண்.204/வ.ஆ.அறிக்கை/திருவாரூர்/2019 நாள் 19.03.2019 அன்று வக்ஃப் ஆய்வாளர் அளித்த அறிக்கையின்படி தங்கள் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் கோப்புகள், ந.க.எண்.204/வ.க.தஞ்சை/2019 நாள் 20.03.2019 அன்று வக்ஃப் கண்காணிப்பாளர் அளித்த அறிக்கையின்படி தங்கள் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் கோப்புகள், புகார் மனுதாரர் ஜனாப் ஷேக் முகம்மது அளித்த மனு

எண்.0321/07.01.2019-ல் அளித்த பொருளாதார புகாரின் மீது தங்கள் அலுவலகத்டதில் எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் கோப்புகள், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் ந.க.எண்.6711/ஆ7/திரூர் நாள் 16.06.2023-ன் குறிப்பாணையின் நகல், விஜயபுரம் மஹானிமுல் ஹசராத் முஸ்லிம் சங்கத்தின் Proforma Report-ன் சான்றிதழின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 9 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு மனு எண்.4804/25/தஞ்சை/த.அ.ச நாள் 11.04.2025 தேதியிட்டு தகவல்களை 15.04.2025 அன்று பதிவுத்தபாலின் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதுகிறது. மேலும், மனுதாரர் அத்தகவல்களை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.17018/F/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை - 600 001.

**<u>வழக்கு எண்.SA.17018/F/2024</u>**

**<u>மனுதாரர்</u>**

திரு S.J. ஹசன் குத்தூஸ்,
த/பெ. செய்யது ஜெய்னுல் ஆப்தீன்,
எண்.48, புள்ளதெரு, திருவாரூர் (அ) - 610 001.

Copy to: File
SNPS / 17.04.2025